Crl.Misc.39

D E P O S I T I O N  O F  W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.229/2015

**P.W**. 5(LW10)

| | |
|---|---|
| Name | : திரு.முருகன் |
| Father/Husband Name | : திரு. |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2026

மனுவின் பேரில் திரு.முருகன் காவல் உதவி ஆய்வாளர் இந்த வழக்கில் கூடுதல் சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மாமல்லபுரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான சசிக்குமார் காவல் சிறப்பு உதவி ஆய்வாளரின் கையெழுத்தும் கையொப்பமும் நன்கு தெரியும் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 03.10.2015ம் தேதி 18.45 மணியளவில் மாமல்லபுரம் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.சசிக்குமார் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஜெய்பீம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதனடிப்படையில் நிலைய குற்ற எண்.363/2015

இ.த.ச.பிரிவுகள் 147, 294(பி), 324, 506(1) –ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். **(புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின் அவர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் புஷ்பா, ஜெகதீஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். ( **பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்பு சாட்சிகள் ஜெய்பீம், அலெக்சாண்டர், பாண்டி, கந்தன் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான புஷ்பா, ஜெகதீஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

4. பின் இவ்வழக்கின் எதிரி சிலம்பு, சுமன், செல்வகுமார், டில்லிபாபு ஆகியோர்கள் முன்பிணையில் சென்றதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களான ஜெய்பீம், அலெக்சாண்டர், பாண்டி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் இர்பான்ஆசான் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து விபத்து பதிவேடுகள் பெற்றார். **(விபத்து பதிவேடுகள் 3 எண்ணிக்கைகள் அ.சா.ஆ.6, அ.சா.ஆ.7, அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் காயம்பட்ட நபர்களுக்கு காயச்சான்றுகள் வழங்கிய மருத்துவர் சபரினா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றுகள் பெற்றார். **(காயச்சான்றுகள் 3 எண்ணிக்கைகள் அ.சா.ஆ.9, அ.சா.ஆ.10, அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அவர் வழக்கின் சட்டப்பிரிவுகளை 147, 294(பி), 324, 506(1) இ.த.ச. விலிருந்து சட்டப்பிரிவு 294(பி), 324, 506(2) இ.த.ச. வாக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தார். **(சட்டப்பிரிவு**

**மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**5.** இத்துடன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 324, 506(2)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். அவரது விசாரணையில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையானோர் வழக்கு சம்பவம் குறித்து வாக்குமூலம் அளித்துள்ளார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

அ.சா.1 னிடமிருந்து விசாரணை அதிகாரி புகார் எதையும் பெறவில்லை என்றாலும் சாட்சிகளை அவர் சரிவர விசாரணை செய்ய வில்லை என்றாலும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நிலையத்தில் வைத்து வழக்குக்கு ஏதுவாக தயார் செய்யப்பட்டுள்ளன என்றாலும் வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.